**பண்டாரகம பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பண்டாரகம பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பண்டாரகம பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நியமத்தின் 3.7 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் பாதீடு செய்யப்பட்ட தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | 2022 ஆம் ஆண்டில் இறுதிக் கணக்கில் சரி செய்யப்படும். | பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நியமத்தின் 3.27 ஆம் பிரிவு முதல் 3.32 ஆம் பிரிவு வரை குறிப்பிடப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய முறைமைக்கு இணங்க மீளாய்வாண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படாதிருந்தமை பின்வரும் விடயங்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. | | |

| | | |
|---|---|---|
| • செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் ஆண்டிற்கான மிகை ரூபா 52,741,814 காண்பிப்பதற்கு பதிலாக ஆண்டின் விரிவான வருமானம் ரூபா 61,230,336 காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்படும். | உள்ளூராட்சி நிறுவனங் களுக்கான பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| • ஆண்டின் இருப்பில் அதிகரிப்பு ரூபா 494,706 செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காசு வெளிப்பாய்ச்சலாக காண்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அது காசு உட்பாய்ச்சலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| • ஆண்டில் ஏனைய நடைமுறைச் சொத்துக்களின் அதிகரிப்பு ரூபா 20,000 செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காசு வெளிப்பாய்ச்சலாக காண்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அது காசு உட்பாய்ச்சலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| • ஆண்டில் கிடைக்க வேண்டிய தேவைகளின் குறைவு ரூபா 29,634,929 ஆக இருந்த போதும் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் அது ரூபா 29,547,391 ஆக அதாவது ரூபா 87,538 குறைத்தக் காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| • செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் ஆண்டில் செலுத்த வேண்டியவைகளின் குறைவு ரூபா 12,224,952 காசு வெளிப்பாய்ச்சலாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அது காசு உட்பாய்ச்சலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்படும். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| • | 2021 ஆம் ஆண்டில் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 5,000,000 முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காசு வெளிப்பாய்ச்சலாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அது காசு உட்பாய்ச்சலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| • | ஆண்டில் காசாக மேற்கொள்ளப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண கொள்வனவுகள் ரூபா 19,945,890 முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காசு வெளிப்பாய்ச்சலாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அது ரூபா 39,029,165 காசு உட்பாய்ச்சலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| • | 2021 ஆம் ஆண்டில் கிடைத்த மூலதன மானியம் ரூபா 21,744,566 ஆக இருந்த போதும் நிதிச் செயற்பாடுகளின் கீழ் அது ரூபா 30,233,088 ஆக அதாவது ரூபா 8,488,522 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| • | ஆண்டில் நீண்டகால கடன்களை மீள செலுத்துதல் ரூபா 5,197,871 நிதி செயற்பாடுகளின் கீழ் காசு வெளிப்பாய்ச்சலாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அது காசு உட்பாய்ச்சலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | நியமத்தின் 6.3 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனமொன்றினால் காணி மற்றும் கட்டிடங்கள் தனித்தனியாக கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 109,631,856 தொகையான காணிகளின் பெறுமதியில் | புதிய மதிப்பீட்டின் பின்னர் காணி மற்றும் கட்டிடங்கள் சரியாக சீராக்கப்படும். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | 2015 முதல் 2019 ஆம் ஆண்டு வரை மூலதனமாக்கப்பட்ட ரூபா 108,631,860 தொகையான கட்டிடங்களின் பெறுமதியும் உள்ளடக்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | நியமத்தின் 6.10 ஆம் பந்தியின் சொத்தொன்றின் கிரயம் திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் இழிவுப் பெறுமதி குறைக்கப்பட்டதன் பின்னர் கிடைக்கின்ற பெறுமதியின் அடிப்படையில் பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக பெறுமானத்தேய்வு கணிப்பிடும் போது சொத்துக்களின் இழிவுப் பெறுமதி மதிப்பீடு செய்யப்படாதிருந்ததுடன் சொத்துக்களின் கிரயத்தின் அடிப்படையில் பெறுமானத்தேய்வு சீராக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டில் இழிவுப் பெறுமதி குறைக்கப்பட்டதன் பின்னர் பெறுமானத்தேய்வு சீராக்கப்படும். | - மேற்படி - |
| (உ) | நியமத்தின் 11.10 ஆம் பந்தியின் பிரகாரம் நிகழத்தக்க பொறுப்புக்களை தீர்த்து வைக்கும் போது வளங்களின் வெளிச் செல்கையை எதிர்பார்க்கப்படுமாயின் அது நிகழத்தக்க பொறுப்பின் தன்மை தொடர்பாக குறுகிய விபரமொன்று நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். எனினும் மீளாய்வாண்டில் நடைபெற்ற 09 வழக்குகள் தொடர்பாக நிகழத்தக்க பொறுப்பாக இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | 2022 இன் இறுதிக் கணக்கில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |

## 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கட்டிட பதிவேட்டின் பிரகாரம் சபைக்குச் சொந்தமாக 29 கட்டிடங்கள் காணப்பட்ட போதும் அந்த கட்டிடங்களின் ஒட்டுமொத்த பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களில் கட்டிடமாக 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது மூலதனமாக்கப்பட்ட பெறுமதி ரூபா 13,012,411 மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்தது. | காணி மற்றும் கட்டிடங்களுக்காக சரியான மதிப்பீடொன்றை மேற்கொண்டதன் பின்னர் 2021 இன் இறுதிக் கணக்குகளில் சீராக்கப்படும். | காணி மற்றும் கட்டடிங்கள் முறையாக மதிப்பீடு செய்து சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மீதியில் பௌதீக ரீதியில் இனங்காணப்பட்ட மில்லனிய பிரதேச சபைக்குரிய ரூபா 12,213,571 ஆன ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தது. அந்த சொத்துக்களுக்காக 2021 ஆம் ஆண்டிற்குரிய பெறுமானத்தேய்வு அளவு ரூபா 1,025,512 கணக்குகளில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 இன் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரியான பெறுமானத்தேய்வு ஒதுக்கப்படும். | சபைக்கு சொந்தமான சகல நிலையான சொத்துக்களும் பெறுமானத்தேய்வு செய்யப்படல் வேண்டும். |
| (இ) | தனியார் நிறுவனம் மற்றும் பண்டாரகம பிரதேச சபைக்கிடையே 2017 செப்தெம்பர் 19 ஆந் திகதி உடன்படிக்கை செய்யப்பட்ட அலுவலக முகாமைத்துவத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 3.895,000 பெறுமதியான LGS கணனி மென்பொருள் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் போது சொத்தாக மூலதனமாக்கப்படும். | கணனி மென்பொருள் சொத்தாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | 2020 ஆம் ஆண்டின் போது கிடைக்கப்பெற்ற மூலதன செலவின மானியம் ரூபா | 2022 ஆம் ஆண்டின் போது சரியாக காண்பிப்பதற்கு | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 84,885,223 தொகையில் அந்த மூலதன மானியம் ஈடுபடுத்தப்பட்ட சொத்துக்களுக்குரிய பெறுமானத்தேய்வு சதவீதத்திற்கு சமமான பெறுமதியொன்றிற்கு அண்ணளவாக ரூபா 8,488,522 தொகை மீளாய்வாண்டின் போது விரிவான வருமானக் கூற்றில் வருமானத்தின் கீழ் மீண்டெழும் அல்லாத செலவினத்திற்காக அரசாங்கத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட மாற்றலாக குறிப்பிடப்படா திருந்தமையால் ஆண்டின் மிகை அப்பெறுமானத்தால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (உ) | 2020 ஆம் ஆண்டின் போது கிடைக்கப்பெற்ற ரூபா 84,885,223 மூலதன மானியத்தில் மீளாய்வாண்டின் போது வருமானமாக இனங்காணப்பட்ட மிகையில் அல்லது பற்றாக்குறையில் இனங்காணப்படாமல் மூலதன மானியக் கணக்கை செலவு வைப்பதற்கு பதிலாக ஒதுக்கம் மற்றும் ஒதுக்கீட்டு கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் போது நாட்குறிப்பு பதிவுகள் மூலம் சரி செய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஊ) | 2021 ஆம் ஆண்டின் போது கிடைத்த மூலதன மானியம் ரூபா 21,744,566 ஆன சொத்துக்கள் மற்றும் தொகை சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் மிகையில் அல்லது பற்றாக்குறையில் இனங்காணப்படாமல் மூலதன மானியத்தின் கீழ், ஒதுக்கம் மற்றும் ஒதுக்க கணக்குகளின் கீழும் இரு தடவை குறிப்பிடப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (எ) | மீளாய்வாண்டின் மிகையில் அல்லது பற்றாக்குறையில் இனங்காணப்படாமலும் மற்றும் இனங்காணப்பட்ட | 2022 ஆம் ஆண்டின் போது சரி செய்யப்படும். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | மூலதன மானியங்களுக்குரிய பேரேட்டுக் கணக்கில் பதியப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஏ) | மீளாய்வாண்டிற்கான உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் மிகையில் அல்லது பற்றாக்குறையில் இனங்காணப்படாமல் மூலதன மானியம் மற்றும் ஒதுக்கங்களின் கீழ் ஒதுக்கீட்டு கணக்குகளுக்காக மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்கள் பதியப்படாமையின் காரணமாக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒட்டுமொத்த உரிமை மூலதனத்தின் பெறுமதி சரியாக காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஐ) | சபைக்கு கையேற்கப்பட்ட ஏலவிற்பனையில் 02 காணி கூறுகளுக்குரிய பெறுமதி சபைக்குச் சொந்தமான சொத்தாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 இன் இறுதிக் கணக்கில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சபைக்குச் சொந்தமான சகல சொத்துக்களும் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

## 1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 06 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான பெறுமதிக்கும், அதற்கு நேரொத்த அறிக்கைகளில் காண்பிக்கப்படுகின்ற பெறுமதிகளுக்கும் இடையே ரூபா 23,814,671 வேறுபாடு காணப்பட்டது. | கணக்குகளில் வேறுபாடுகளை பரீட்சித்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான மீதி கணக்குகளில் உள்ளடக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 52,741,814 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 41,933,126 ஆகும்.

**2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 சனவரி 01 இல் உள்ளவாறு ஆதனவரி நிலுவை ரூபா 3,913,522 ஆக இருந்ததுடன் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அதில் ரூபா 2,251,840 அதாவது 58 சதவீதம் அறவிடப்பட்டிருக்க வில்லை. | நிலுவை வருமானம் அறவிடப்படுகின்றது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) 2019, 2020, 2021 ஆம் ஆண்டுகளுக்குரிய மாகாண இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட முத்திரைக் கட்டண பட்டியல்களில் ரூபா 34,459,994 தொகை மற்றும் நீதிமன்ற தண்டப்பண பட்டோலைகளில் ரூபா 1,006,966 தொகை என்பன 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கிடைத்திருக்கவில்லை. | மாகாண இறைவரித் திணைக்களத்திலிருந்து கிடைத்திருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பண்டாரகம பிரதேச சபையிலிருந்து தனியான ஒரு அலகாக 2018 மார்ச் 20 ஆந் திகதி மில்லனிய பிரதேச சபை தாபிக்கப்பட்டிருந்ததுடன் சொத்துக்களை பகிரும் விகிதம் தொடர்பாக இணங்காமையினால் தாபிக்கப்பட்டு 04 வருடங்களுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும் சபை இரண்டிற்கும் இடையே சொத்துக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை. | பண்டாரகம மற்றும் மில்லனிய 70:30 விகிதத்தில் சொத்துக்களை பகிர்ந்தளிக்கும் வகையில் பொதுச் சபை தீர்மானம் உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. | சொத்துக்களை பகிர்ந்தளித்தல் விரைவாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | பிரதேசசபை நிதியத்திலிருந்து ரூபா 800,000 இனை பயன்படுத்தி மறுசீரமைக்கப்பட்ட சந்திரசிறி ஞாபகார்த்த சக்தி உடற்பயிற்சி நிலையம் 2012 பெப்ரவரி 15 ஆந் திகதி மக்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டிருந்ததுடன் அந்தக் கட்டிடம் நீண்ட காலமாக பயன்படுத்து வதற்காக ஈடுபடுத்தப்படாமல் இயந்திர பொறிமுறைகள் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. அவ்வாறே 2021 ஆம் ஆண்டில் உடற்பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருந்த போதிலும் உடற்பயிற்சி நிலையம் பயிற்சியாளருக்கு ரூபா 82,500 படி செலுத்தப்பட்டிருந்தது. | கொவிட் தொற்றுநோயின் காரணமாக மே முதல் ஒக்தோபர் வரை பயிற்சியளித்தல் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்ததுடன் இயந்திர பொறிமுறைகள் பாதுகாப்பாக வைப்பதற்காக சேவையினை வழங்கியமையினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | உடற்பயிற்சி நிலையத்தில் பயிற்சி அளிப்பதற்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நகர அபிவிருத்தி அதிகார சபையால் நிர்மாணிக்கப்பட்டு சபைக்கு கையளிக்கப்பட்ட வாராந்த சந்தைக் கட்டிடம் 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் பயனற்று காணப்பட்டது. | கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக வாடகைக்கு வழங்கு வதற்கு நடவடிக்கை எடுக்கப் படாதிருந்ததுடன் வாராந்த சந்தையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு வியாபார சமூகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | வாராந்த சந்தையை வாடகைக்கு வழங்குவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |